# 19 தேனீயும் குளவியும்

தேனீயரே தேனீயரே - அன்பு
திரியாத தம்பியரே
யானொன்று கூறிடுவேன் - அதை
இன்பமுடன் கேட்டிடுவீர்.

பொன்னை வென்ற நின்னிறமும் - நல்ல
புள்ளிகளு முள்ளவனும்
என்னையிந்த மானிடர்கள் - கொல்ல
எண்ணுவதே னிங்குரைப்பாய்.

உருவத்தில் நீ யொவ்வுவையோ - என்னை
யுடல்வளத்தில் ஒவ்வுவையோ
பருமைதனில் ஒவ்வுவையோ - என்னைப்
பார்க்க அவர் கூசுவதேன்.

குளவியரே குளவியரே - எங்கள்
குலத்தினிலே மூத்தவரே
தெளிவுதருந் தூயவுடல் - கொண்ட
செல்வனாரே கேட்டிடுவீர்.

கூடுகட்டுந் தொழிலாலும் - மற்றக்
குறிகுணங்கள் தம்மாலும்
நாடிலெம்மிற் பேதமில்லை - என்னை
நல்லோ னெனுங் காரணங்கேள்.

கொட்டுதலில் நின்போலும் - யான்
கொடியோனு மல்ல கண்டாய்
பட்டப்பகல் தோறு மலர் - நறும்
பனித்தேன் யான் சேர்த்திடுவேன்.

யான்சேர்க்கும் தேனையெல்லாம் - அவர்
இன்பமா யெடுத்திடுவார்
தேன்சேர்க்கு மாசையன்றோ - என்னைத்
தினமுமவர் போற்றுவது.

**- மு. நல்லதம்பி**
'இளைஞர் விருந்து'

## அரும்பதங்கள்

ஒவ்வுவையோ - ஒப்பாவாயோ
பேதம் - வேறுபாடு
பனித்தேன் - இனிமையான தேன்



### கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தேனீக்கும் குளவிக்கும் இடையேயான ஒற்றுமை, வேற்றுமைகள் எவை?
2. ''நன்மை செய்யாத போதிலும், தீமையாவது செய்யாது இரு!'' என்பதனை இப்பாடலைக் கொண்டு விளக்குக.
3. புற அழகை வைத்து எவரும் நட்புப் பாராட்டுவதில்லை என்பதற்கு இப்பாடல் எவ்வாறு உதாரணமாகின்றது?
4. தேனீ மக்களால் போற்றப்படுவதற்கான காரணம் யாது?
5. கொட்டுதல், தேன்சேர்த்தல் எனும் சொற்களின் விளக்கத்தினை எழுதுக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

தேனீயும் குளவியும் என்ற பாடல்கள் தரும் பொருளை அடிப்படையாகக் கொண்டு உரையாடல் ஒன்றை எழுதுங்கள்.

# சொற்புணர்ச்சி II

**வாழை + மரம் → வாழைமரம்**

மேலே நாங்கள் அவதானித்த சொற்புணர்ச்சியில் வாழை என்ற சொல்லுடன் மரம் என்ற சொல் புணர்ந்து வாழைமரம் என்ற சொல் உருவாகியுள்ளது. இங்கு முதலில் உள்ள சொல் (வாழை) நிலைமொழி எனப்படும். இரண்டாவதாக உள்ள சொல் (மரம்) வருமொழி எனப்படும்.

சொற்புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இரண்டு சொற்கள் தொடர்புபட்டிருந்தாலும் அச்சொற்களிலுள்ள இரண்டு எழுத்துக்களே நேரடியாகத் தொடர்புபடுகின்றன.

**வாழை + மரம் → வாழைமரம்**

↓ ↓

(ழ் + ஐ) + (ம் + அ)

நிலைமொழியின் இறுதி/ஈற்றெழுத்து நிலைமொழி ஈறு எனப்படும். மேலே நிலைமொழி ஈறாக '**ஐ**' உள்ளது.

வருமொழியின் முதல் எழுத்து வருமொழி முதல் எனப்படும். மேலே வருமொழி முதலாக '**ம்**' உள்ளது.

புணர்ச்சியில் நிலைமொழி ஈறும் வருமொழி முதலுமே நேரடியாகத் தொடர்புபடுகின்றன.

நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் இடம்பெறும் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சொற்புணர்ச்சியைப் பாகுபடுத்தலாம்.


**பலா + இலை → பலாவிலை**

↓ ↓

(ல்+ஆ)+ இ

இங்கு நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உயிர் எழுத்துக்கள் இடம்பெறுகின்றன. இது ''உயிர்முன் உயிர் புணர்தல்'' எனப்படும்.

இவ்விதம் சொற்புணர்ச்சிகள் நான்கு வகைப்படும். அவையாவன;
**உயிர்முன் உயிர் புணர்தல்**
**உயிர்முன் மெய் புணர்தல்**
**மெய் முன் உயிர் புணர்தல்**
**மெய் முன் மெய் புணர்தல்**





**உயிர்முன் உயிர் புணர்தல்**

பூ + இதழ் → பூவிதழ்

மணி + ஓசை → மணியோசை

மேலேயுள்ள இரண்டு புணர்ச்சிகளிலும், நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிர் எழுத்துக்களே இடம்பெற்றுள்ளன. புணர்ச்சியின் போது யாது நிகழ்ந்துள்ளது என அவதானிப்போம்.




இங்கு '**வ்**' எனும் மெய்யெழுத்துத் தோன்றி வருமொழிமுதலான 'இ' எனும் உயிர் எழுத்துடன் இணைந்து 'வி' எனும் உயிர்மெய்யெழுத்தாகியுள்ளது.

மணி - ய் - ஓசை → மணியோசை

யோ

இங்கு '**ய்**' எனும் மெய்யெழுத்துத் தோன்றி வருமொழி முதலான 'ஓ' எனும் உயிர் எழுத்துடன் இணைந்து, 'யோ' எனும் உயிர் மெய்யெழுத்தாகி யுள்ளது.

மேற்கண்ட உதாரணங்களிலிருந்து நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்து வரும் சந்தர்ப்பங்களில் புணர்ச்சியின்போது மெய்யெழுத்துத் தோன்றுவதனை விளங்கிக்கொள்வோம்.

உயிர்முன் உயிர் புணரும் சந்தர்ப்பங்களில் மெய்யெழுத்துத் தோன்றி புணர்ச்சி இடம்பெறும். இவ்வாறு தோன்றும் மெய்யெழுத்து 'உடம்படு மெய்' எனப்படும்.

நிலைமொழியீற்றில் இ,ஈ,ஐ ஆகிய உயிரெழுத்துக்கள் வரின், உடம்படு மெய்யாக யகர மெய் (ய்) தோன்றும்.

நிலைமொழியீற்றில் அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிரெழுத்துக்கள் வரின் உடம்படுமெய்யாக வகரமெய் (வ்) தோன்றும்.

நிலைமொழியீற்றில் ஏ எனும் உயிரெழுத்துவரின் உடம்படுமெய்யாக யகரமெய் (ய்) அல்லது வகரமெய் (வ்) தோன்றும்.




பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுவதோடு, புணர்ச்சியில் தோன்றும் உடம்படுமெய்யினையும் எழுதுக.

1. விலா + எலும்பு
2. பல + உயிர்
3. பனி + இரவு
4. கோ + இல்
5. கலை + இன்பம்
6. தே + ஆரம்
7. அரிசி + இல்லை
8. பூ + அழகு
9. தீ + எரிந்தது
10. திரு + அடி

## உவமைத்தொடர்

உவமையணிக்கான உவமானங்களை உள்ளடக்கிய தொடர்களே உவமைத் தொடர்கள் எனப்படுகின்றன. கூறவந்த விடயத்தினைத் தெளிவாகக் கூற இத்தொடர்கள் உதவுகின்றன. சில உவமைத்தொடர்கள் கீழே தரப்படுகின்றன.

★ அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
★ இலவு காத்த கிளி போல
★ குடத்துள் வைத்த விளக்குப் போல
★ கொழுகொம்பற்ற கொடி போல
★ தொட்டனைத் தூறும் மணற்கேணி போல
★ நகமும் சதையும் போல
★ பசுமரத்தாணி போல
★ மீகாமன் இல்லாத மரக்கலம் போல
★ விளக்கொடு விளையாடும் விட்டில் போல
★ வேலி பயிரை மேய்ந்தாற் போல

### பயிற்சி

பின்வரும் உவமைத் தொடர்களை பொருத்தமாக வாக்கியங்களில் வைத்து எழுதுக.

1. அக்கினியிற் பட்ட மெழுகு போல
2. அத்தி பூத்தாற் போல
3. ஆகாயத்திற் கோட்டை கட்டுவது போல
4. உட்சுவரிருக்க புறச்சுவர் கோலஞ்செய்வது போல
5. கன்றைப் பிரிந்து கதறும் பசுவைப் போல
6. நடுவூரில் நல்ல மரம் பழுத்ததைப் போல
7. பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டது போல
8. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாமை போல
9. ஒளியைக் கண்ட இருள் போல
10. உலக்கை தேய்ந்து உளிப்பிடியானதைப் போல